சென்ற இருபது வருஷகாலமாய் இந்தியாவில் சீமைச்சாராயம் அருந்துதல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. நாகரீகம் நிறைந்த பெரிய பட்டணங்களில் ஆரம்பிக்கிற இந்தச்சாராயக்குடி நாளுக்குநாள் கிராமாந்திரங்களிலும்புகுந்து பரம்பிவருகிறது. இதுவரையில் அநேக கிராமங்களில் சீமைச்சாராயமின்னதென்று தெரியாது. கிராமவாசிகள் பெரும்பாலார் குடியென்னும் பயங்கர பசாசின் வாய்க் கிரையாகாமலே தப்பித்துவந்தார்கள். ஆனல் பெரிய பட்டணங்களில் படித்தவர்களே சீமைச்சாராயங்களையருந்த வழிகாட்டுவதினாலும், பெரியபட்டணங்களுக்கும் சுற்றுப்புற கிராமங்களுக்கும் பிரயாணவசதி வெகுசுலபமாயேற்பட்டுப் போக்குவரத்து மிகத் தாராளமாயிருக்கிறதினாலும் இப்போது எந்தச் சிறிய கிராமத்திலும் சீமைச்சாராயம் அருந்துதல் சகஜமாய்விட்டது. தற்போது சாராயக்குடி இந்தியாவில் பரம்பிவருகிற வேகத்தைக் கவனிக்கையில் வெகுசீக்கிரத்திலே இந்தியா மேல்நாடுகளைப்போல் பயங்கர குடிகார தேசமாகிவிடும் என்று பயப்படவேண்டியதாயிருக்கிறது. இந்தத் தேசத்தில் பட்டணவாசிகளும் கிராமவாசிகளும் ஒன்றுபோல சாராயம் குடிக்க ஆரம்பித்துவிட்டால் இதன் நிலைமை எப்படியிருக்குமோ தெரியாது. நமது தேசத்தார் இயல்பாய் தரித்திரர். கிராமாந்தரங்களிலுள்ளவர்கள் வெகுஅற்ப ஜீவனத்தைக்கொண்டு காலந்தள்ளுகிறவர்கள். அவர்களிலநேகர் ஒருவேளை சாப்பிட்டு ஒருவேளை பட்டினிகிடந்து மசனிகளாய் ஜீவிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சீமைச்சாராயங்குடிக்கப் பழகிவிடுவார்களானால் அவர்கள் கதி அதோகதியாகவே முடியும். சாப்பாட்டுக்கே நிர்வாகமில்லாத கிராமவாசிகள் சாராயமருந்த பணத்துக்கு எங்கேபோவார்கள் என்று சிலர் சொல்லலாம். அப்படியன்று. ஒருமுறை குடிக்கப்பழகிவிட்டவன் தன் கையிற் கிடைக்கிற சொற்ப காசையும் சாராயத்துக்குச் செலவிட்டுத் தன் வேட்கையைத் திருப்திசெய்யப்பார்ப்பான். அதனால் நேரிடுவதென்ன? முன்னிருந்த தரித்திரத்தினும் பதின்மடங்கான தரித்திரம். முந்தியாவது பெண்சாதிப்பிள்ளைகளுக்கு ஒருவேளைச் சாப்பாடிருந்தது. இப்போது அதுதானுமிருக்கப்போகிறதில்லை; அன்னப்பிடி வெல்லப்பிடியாகவே மாறிப்போகும். கட்டக் கந்தைதானும் கிடைக்குமோ என்பது சந்தேகம். இங்கிலாந்திலே குடியிற்பழகின பரமஏழைகளின் நிர்ப்பந்த நிலைமையைக் கண்டவர்கள் அதைப்பற்றிச்சொல்லும்போது கல்லான நெஞ்சும் கரைந்து போகும். குடிமுகாந்தரமாய் அவர்கள் சொல்ல வொண்ணாத தரித்திர நிலைமைக்குட்பட்டுப் பலவித கொடுமைகளுக்கும் குற்றங்களுக்கும் ஆளாகிறதாகச் சொல்லுகிறார்கள். இங்கிலாந்தில் சிலவிடங்களில் சிறைச்சாலைக்குப் போகிற

குற்றவாளிகளில் நூற்றுக்குத் தொண்ணூறும்பேர் குடிகாரர்களென்று சொல்லப்படுகிறது. இந்தியாவில் நாட்டுப்புறங்களிலுள்ள ஏழைக்குடியானவர்களும் சீமைச்சாராயம் குடிக்கப் பழகிவிடுவார்களாயின் இத்தேசத்தின் பரிதாபநிலைமை இங்கிலாந்தைவிட நூறுமடங்கு அதிகமாயிருக்குமென அறிவாளிகள் நினைக்கிறார்கள். ஏனெனில் ஏற்கனவே மகா ஏழ்மை தனத்திலுள்ள இந்நாட்டுக் குடியானவர்களைக் குடியானது எந்த பாதாள லோகத்தில் கொண்டுபோயிறக்கிவிடுமோ தெரியாது. ஆகையால் பெரிய பட்டணங்களிலே ஆரம்பித்த சீமைச்சாராயக்குடி கிராமாந்தரங்களிலேயுள்ள பரம ஏழைகளான குடியானவர்களைப் பிடியாதபடி தடுக்கத் தேசாபிமானிகளெழும்பவேண்டும். தன்தேசத்து வாழ்வை விரும்புகிற எந்த தேசாபிமானி இப்பயங்கர நிலைமையைக் கண்டு மவுனமாயிருப்பான்? படித்தவர்களான பலர் எழும்பி இந்தச் சீமைச்சாராயக்குடி, இம்மட்டும் பரிசுத்த தன்மையிலிருக்கிற கிராமங்களில் புகாமற்படி தடுக்க முயலவேண்டும். இதுவிஷயமாக "மாடரன் ரிவ்யூ" என்கிற பத்திரிகையிலெழுதின டில்லிநகர் கனம் ஆன்ட்ரூஸ் போதகர், ஒரு காலத்தில் உலாந்து நாட்டில் தன்னூரை வெள்ளத்தாலழியாதபடி காத்த பையனைப்போன்ற தேசாபிமானிகள் இந்தியாவில் எழும்பவேண்டுமென்றார். அந்தச் சிறுவன் ஒருநாள் மாலைப்பொழுதில் உலாவிக்கொண்டிருக்கையில் தன்னூர், சமுத்திரபெருக்கால் முழுகிப்போகாதபடி கட்டியிருந்த பேரணையில் ஒரு துவாரம் விழுந்து ஜலம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளிப்படுவதைக் கண்டான். உடனே, வெகுசீக்கிரத்தில் துவாரம் பெரிதாகி அணை உடைப்புண்டு ஊர்முழுகிப்போமென்பதை அச்சிறுவனுணர்ந்து, இத்துவாரத்தை அடைக்கமுயன்றான். கல்முதலியன பக்கத்தில் இல்லாதபடியால் தன்சட்டையைக் கழற்றித் துவாரத்தில் நுழைத்தான். அப்போதும் ஜலம்தடைபடாதிருக்க தன்சட்டைகளைக் கையிற் சுற்றிக்கொண்டு கையை துவாரத்தில் விட்டுஅடைத்து வெளிபடுகிற ஜலத்தைத் தடுத்து, தான் சோர்ந்து போகுமட்டில் உதவிக்காக கதறினான். ஒருவரும் வரவில்லை. விடியுமுன் அவன் குளிரினால் விறைத்துச் செத்துப்போனான். ஆயினும் அவன் கரம் துவாரத்தை யடைத்துத்தண்ணீர் பெருகாகப்டி தடுத்துக்கொண்டேயிருந்தது. அந்த இளைஞனின் தேசாபிமானத்தை உலாந்து மறக்கவில்லை. அந்த உத்தமபிள்ளையைப் போல இந்தியாவின் பிள்ளைகள் சிலராகிலும் எழும்பி இந்திய கிராமங்கள் சீமைச்சாராய வெள்ளத்தா லழியாவண்ணம் காப்பாற்றுவார்களாக. இந்த நாட்டில் மதுவிலக்கு வேலையில் ஊக்கம்காட்டுகிற தேசாபிமானிகள் தொகைபோதாது. இன்னும் பலர் எழும்பவேண்டுமென்று விரும்புகிறோம்.

The Red Sea Pharaoh.

செங்கடல் பார்வோன்.

பிரேதங்களைக் கந்தவர்க்கம் தைலமுதலிய திட்டுப் பல வருஷ காலங் கெடாமல் பரிபாலிக்கும் சாஸ்திரத்துக்கு எகிப்து தேசம் பிரசித்தி பெற்றதென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். அந்நாட்டில் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே மரித்தவர்களின் சரீரம் இன்றைக்கும் காப்பாற்றப் பட்டுவருகிறது. கேய்ரோ பட்டணத்திலுள்ள மியூஸியம் என்கிற பொருட்காக்ஷி சாலைக்குப்போய்ப் பார்ப்போமானால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே மரித்த அந்நாட்டு அரசர்களுடைய முகத்தை யின்றைக்குங் காணலாம். இராஜமண்டபம் என்கிற சாலையில், மோசே, யோசேப்பு முதலியோர் காலத்தில் எகிப்தையாண்டதாக வாசிக்கிற பார்வோன்களுடைய பிரேதங்களெல்லாம் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேத வரிசையில் வெகுகாலமாக ஒரு அரசனுடைய சரீரமட்டும் காணப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. அந்த அரசன் யாரென்றால், இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப்புறப்பட்ட காலத்திலிருந்த பார்வோன்தான். சரித்திரம், சாஸ்திரம், சாசனம் ஆகிய ஆதாரங்களெல்லாம் இந்தப் பார்வோனை இரண்டாம் இராமசேஸ் மகனாகிய மெனெப்தா என்று சொல்லுகின்றன. மெனெப்தா அல்லது சேதிமெரேனெப்தா என்று இவனுக்குப் பெயர் வழங்கினது. இவனுடைய சரீரம் அந்தப் பிரேத வரிசையில் காணப்படாதது அதிசயமன்று. ஏனெனில் இவனும், இவன் சேனைகளும் இஸ்ரவேலரைத் தொடர்ந்துபோனபோது செங்கடலில் ஆழ்ந்துபோனார்களென்று

சத்தியவேதப் புஸ்தகத்தில் வாசிக்கிறோம். எனவே இந்த அரசனைக் கடல் கொண்டு போய்விட்டதென்று திட்டமாய் விளங்குகிறது. இப்படியிருக்க சிலவருஷங்களுக்கு முந்தி எகிப்தில் இராஜ சமாதிப் பள்ளத்தாக்கில், இது வரையில் கண்டு பிடிக்கப்படாத சமாதியொன்று கண்டு பிடிக்கப்பட்டதாயும், அது கடல் கொண்டு போனதாகக் கருதப்பட்ட மெனெப்தாவின் சமாதியே என்றும் வெளியானபோது அநேகம் பேருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. என்றாலும் அச்சமாதி அக்காலத்தில் தக்கபடி சோதிக்கப்படவில்லையென்று சொல்லப்பட்டது. அதனால் மெனெப்தாவின் பிரேதத்தை க்ஷேமிக்கும் நோக்கமாய் அச்சமாதி கட்டப்பட்டிருக்கலாமாயினும், அவனைக் கடல்கொண்டுபோய் விட்டமையால் அவனுடைய தேகம் அதற்குள் வைக்கப்படாதிருக்கலாமென்கிற அபிப்பிராயமுண்டாயிற்று. நாளது காறும் சத்திய வேதாபிமானிகளெல்லாரும் இவ்வித அபிப்பிராயமே உடையவர்களா யிருக்கின்றனர். ஆனால் இப்போது முந்தி கண்டு பிடிக்கப்பட்ட அந்தச் சமாதி தீர்க்கமாய்ப் பரிசோதனை செய்யப்பட்டு அதில் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு வைக்கப்பட்ட மெனெப்தாவின் சரீரம் கண்டு பிடிக்கப்பட்டதென்றும், அது கெய்ரோவிலுள்ள பொருட் காக்ஷிசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, மற்ற இராஜாக்களுடைய பிரேத வரிசையில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும்சொல்லப்படுகிறது. இந்தச்சமாதி மலைக்குள்ளே 300 அடி ஆழத்தில் வெட்டப்பட்டிருந்ததாம். அதற்குள் பல அறைகளும் ஆறு பெரிய கூடங்களுமிருந்தனவாம். கூடங்களுக்குப் புறத்திலிருந்த 40 அடி நீளமும் 30 அடி அகலமுமான பெரிய அறையில் மெனெப்தாவின் சவப்பெட்டியிருந்ததாம். அந்தப்பெட்டி யுடைபட்டிருந்தபடியால் சமாதிக் கள்வர்கள் அப்படிச் செய்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. பெட்டியின்மேல் மெனெப்தா என்கிற பெயர் எழுதப்பட்டிருப்பது மாத்திரமன்று, அவனுடைய உருவமும் சகல சின்னங்களும் வரையப்பட்டிருக்கின்றனவாம். இது மிஸ்டர் ஹாவர்ட் கார்ட்டர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டதென்றும், இந்த பிரேதம் யாத்திராகம பார்வோனுடையது என்பதற்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது. சமாதியில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆதாரங்களைக்கொண்டு அது யாத்திராகம பார்வோனது சரீரமே யென்று விளங்குகிறபடியால் அவன் கடலில் மாளாமல் இயல்பாகவே மரித்து அடக்கம் பண்ணப்பட்டானென்று வேதத்தை நம்பாத சில சாஸ்திரிகள் சாதிக்கிறார்கள். கண்டுபிடிக்கப்பட்ட சரீரம் யாத்திராகமப் பார்வோனுடையதாகவே யிருந்தால் தானென்ன? அதனால் வேதம் பொய்யாகுமா? கடலில் மாண்ட பார்வோனுடைய பிரேதம் பின்னுலெடுக்கப்பட்டுச் சமாதியில் வைக்கப்பட்டிருக்கக்கூடுமல்லவா? இதை இந்தச் சாஸ்திரிகள் யோசியாமற்போயினர். யாத். 14.-30ல், எகிப்தியர் கடற்கரையில் செத்துக் கிடந்ததை இஸரவேலர் கண்டார்கள் என்றிருப்பதால், ஒதுக்கப்பட்ட பார்வோன் சரீரம் எகிப்தியரால் எடுக்கப்பட்டுச் சமாதியில் வைக்கப்பட்டிருக்கக் கூடுமென்று திட்டமாய் நம்பத்தகும்.

The Revolution in Portugal

போர்துகாலில் அரசாங்க மாறுதல்.

சென்ற அக்டோபர் மாதம் முதல்வாரத்தில் போர்துகால் இராச்சிய அரசாட்சி குடியரசாகி விட்டதென்று வந்த சங்கதி சகல இராச்சியத்தையுந் திடுக்கிடச்செய்தது. இரண்டரை யாண்டுகளுக்கு முன்னர் அத்தேசத்தையாண்ட கார்லாஸ் என்கிற மன்னனும் அவர் குமாரனும் ஏககாலத்தில வன்கொலையுண்டார்கள். இது அத்தேச குடிகளின் திருப்திக்கேட்டையும் இராஜ துவேஷத்தையும் காட்டுகிறதென்றாலும், இராஜ துவேஷகொலைகள் வெறிகொண்ட துன்மார்க்கரால் அடிக்கடி நடப்பது இயல்பாதலால்; பிரஜைகளெல்லாருமே அரசாங்கத்தைக் கவிழ்க்கக்கூடிய அவ்வித மனப்பாங்குடையவரா யிருக்கிறார்களென்று யாரும் கருதவில்லை. ஆகையால் போர்துகால் அரசாங்க மாறுதல் திடும் பிரவேசமாய் வந்த செய்தியாகவே யிருந்தது. இப்போது வெளியாகிறபடி அத்தேசத்தில் அரசனுக்கு விரோதமான பகை உள்ளுக்குள்ளே வெகுகாலமாயிருந்ததாகவே தெரியவருகிறது. 40 வருஷங்களாக நிரீசுரவாதிகளான சிலர் எழும்பி அரசா

ங்க முறைகளைப் பறித்துக் குடியரசாக்க வேண்டுமென்கிற விருப்பமுடையவர்களாயிருந்திருக்கிறார்கள். இவர்களுடைய கக்ஷி வெகு காலம் தலையெடுக்காதபடி இராச்சிய பாரம் நடந்தேறி வந்தது. ஆனால் சமீபத்தில் கார்லாஸ் அரசனுக்குப் பிந்தி அவர் குமாரன் மானியல் அரசன் பட்டத்துக்குவர, வாலிபனான இந்த அரசனுடைய ஆளுகையில் குடியரசு கக்ஷி பலப்பட்டது. பெரும்பாலான உத்தியோகஸ்தரும் மந்திரிமாரும் இக்கக்ஷியாருக்கு உடந்தையாயிருந்ததாகக் காணப்படுகிறது. இவர்கள் அரசனைச் சிங்காசனத்திலிருந்து இறக்கித் தேசத்தைக் குடியரசாக்கிவிட எப்போது சமயம் வாய்க்குமோ என்று காத்துக்கொண்டேயிருந்தார்கள். இந்தச் சமயத்தில் பொம்பார்டா என்கிற குடியரசு கக்ஷியைச்சேர்ந்த ஒரு டாக்டரை இராஜ விசுவாச கக்ஷியைச் சேர்ந்த பைத்தியக்காரனொருவன் கொலைசெய்து விட்டான். இச்செய்கையே இராஜ துரோக கலகமென்கிற பெருந்தீயை மூட்டிவிட்ட முதலாந் தீப்பொறி போலிருந்தது. இந்தக்கொலையே, அரசனுக்கு விரோதமான கக்ஷியார் கலகித்தெழும்புவதற்குக்காரணமாயிருந்தது. அக்டோபர்மீ 3வ திங்கட்கிழமையிரவு, லிஸ்பனில் திடீரென்று கலகமுண்டானது. அந்தச் சமயத்தில் லிஸ்பன் பட்டணத்து இராணுவ சேனாபதி ஊரிலில்லை. வாலிப அரசனாகிய மானியல் தன்னரமனையில் சேனார் பான்ஸிகா என்பவருக்கு விருந்துசெய்து மகிழ்ச்சி கொண்டிருந்தார். துறைமுகத்திலிருந்த கப்பல் படை சேனாபதி அட்மிரல் ரீஸ் என்பவன் கலகக்காரர் பக்ஷம் சேர்ந்துகொண்டான். முதல் வெடி அரமனை சுவர் மீதில் மோதினது. அதைத் தொடர்ந்து ஏககாலத்தில் கப்பல்களிலிருந்து பீரங்கிகளும், கலகக்காரரான குடிகளும் அவர்களைச் சேர்ந்துகொண்ட இராணுவ வீரர்களும் பிரயோகித்த துப்பாக்கிகளும் சோனாமாரியாய் வருஷிக்கப் பட்டன. நகர வீதிகளிலெல்லாம் அரசன் பக்கத்திலிருந்த இராஜ விசுவாசமுள்ள போலீஸாருக்கும், விரோதிகளான கலகக்காரருக்கும் பலத்த யுத்தம் மூண்டது. இராணுவவீரர்களே கலகக்காரரோடுசேர்ந்தெழும்பிவிட்டபோது போலீஸார் என்ன செய்யக்கூடும்? தாங்கள் சாப்பிட்ட உப்புக்குப் பாத்திரவான்களாய் கூடியமட்டில் போலீஸார் யுத்தஞ் செய்து கலகக்காரர் கையில் மடிந்தார்கள். வெகுநேரம் யுத்தம் நீடிக்கவில்லை. நகரம் கலகக்காரர் கைவசமாய் விட்டது. அரமனையில் விருந்து செய்து மகிழ்ந்திருந்த மனுவேல் அரசனது இராச்சியம், பாபிலோன் இராச்சியத்தைப்போல ஒரே இராத்திரியில் பிடுங்கப்பட்டது. இனி இராஜன் அரமனையில் தங்குவது மோசமென்று கண்டு, பின் வழியாய்ப் புறப்பட்டுத் தப்பித்துக்கொள்ள ஏற்பாடு செய்தான். தன் தாயும் மனைவியும் பிள்ளையுந் தானும் யாருமறியாமல் வெளிப்பட்டு, துறைமுகத்துக்குப்போய்க் கப்பலேறி ஜிப்ரால்டருக்குப் புறப்பட்டார்கள். இப்போது அவர்கள் இங்கிலாந்துக்குப் போய் நமது சக்கிரவர்த்தி பாதுகாப்பிலிருக்கிறார்கள். நாட்டை ஜெயித்துக்கொண்ட குடியரசு கட்சிக்காரர், சேனார் தியபிலோ பிராகா என்கிற கவிஞனை பிரஜாதிபதியாக நியமித்து, நிரீசுரவாதிகளும் கத்தோலிக்க விரோதிகளுமான பலரை மந்திரிகளாக்கி நாட்டை யாண்டுவருகிறார்கள். அத்தேசத்தைச்சேர்ந்த குடியேற்ற நாடுகளிலெல்லாம் குடியரசு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள கோவையிலும் குடியரசு ஸ்தாபிதமாய்விட்டது. இந்த மாறுதல் ஒரு வகையில் மார்க்க சம்பந்தமானது. எப்படியெனில் உரோமன் கத்தோலிக்கு மார்க்க நிர்பந்தம் பல காலமாய் அநேகரை வெறுப்புக்குள்ளாக்கிவருகிறது. அந்த மார்க்க இராச்சியங்கள் ஒவ்வொன்றாய் அந்த நிர்பந்தத்திலிருந்து விடுபட்டு வருகின்றன. இப்போது போர்துகால் குடியரசு அதிகாரிகளில் பெரும்பாலார் அம்மார்க்க விரோதிகள். பிரஜாதிபதியே நிரீசுரவாதி. ஆகவே, அம்மார்க்க பந்தத்தினின்று நீங்குவதே இக்கலகத்துக்கு ஆஸ்பதம். இது புரோடெஸ்டாண்டு மார்க்கத்தாருக்கு நன்மையாய் முடிந்திருப்பதால் இம்மாறுதலுக்காக நாம் மகிழவேண்டும். புதிய குடியரசு அதிகாரிகள் இப்போது புரோடெஸ்டாண்டு மார்க்கத்தாருக்குச் சமசுயாதீனம் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள்.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்.

All India Temperance Cnoference:—டிசம்பர்மீ கடைசி வாரத்தில அலஹா

பாத்தில் ஏழாவது சர்வ இந்திய மதுவிலக்கு ஆலோசனை சபைகூடும். இந்தியாவிலுள்ள எல்லா மதுவிலக்குச் சங்கங்களும் பெருந்தொகையான பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமென் றெதிர்நோக்கப்படுகிறது. இதைப்பற்றி விசேஷமறிய விரும்புவோர் கவுரவ காரியதரிசி பம்பாய் சர் பாலசந்திர கிருஷ்ணாவுக்கு எழுதிக்கொள்க. இந்திய நாஷனல் காங்கிரஸ் பிரஸிடெண்ட் சர்வில்லியம் வெட்டர்பர்னும் இக்கூட்டங்களுக்குவிஜயஞ்செய்வதாய் வாக்களித்திருக்கிறார். டிசம்பரில் அலஹாபாத்தில் நடைபெறும் இந்திய கைத்தொழில் காக்ஷியில் மதுவிலக்குச் சங்கத்தாரும் ஒருகடைபோடுவார்கள்.

Sale of Drink to Children:—சர் ஹெர்பர்ட் ரூபர்ட்ஸ் பார்லிமெண்டில், பம்பாய்மாகாணத்தில் 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மதுபானம் விற்கப்படுவதைப்பற்றி இந்திய உதவிமந்திரியை கேட்ட கேள்விக்கு அவர் கூறின மறுமொழியாவது: இதுவிஷயமாய் இந்தியா மந்திரி பம்பாய் கவர்ன்மெண்டுக்கு எழுதியிருக்கிறார். 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மதுபானம் விற்கும்படி அனுமதி பெற்றிருக்கிற மதுபானக்கடைகள் பம்பாயிலாவது மாகாணமுழுமையிலாவது கிடையாது. இப்போது கொடுக்கப்படுகிற சில்லறை லைசென்ஸுகளில் அதைத் தடுக்கும்படியான ஒரு சட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

A Temperance Lecture in Bangalore:—இரண்டொரு மாதங்களுக்குமுந்தி பெங்களூரில் குட்வில் என்கிற ஐரோப்பிய போதகர் மதுவிலக்கும் ஐரோப்பியர் பொறுப்பும் என்ற விஷயத்தின் பேரில் பேசிய பொழுது, ஐரோப்பியரே இந்தியரைக்குடிகாரராக்கி விட்டதால் அதை நீக்கும் பொறுப்பு அவர்கள் மேலே விழுந்திருக்கிறதென்றார். ஐரோப்பியர் குடியை வளர்க்கிறவர்களென்று இந்தியர் மனதில் பதிப்பித்திருக்கிறார்களென்பதற்கு ஒரு சிறு திருஷ்டாந்தஞ் சொன்னார். தென்னாட்டில் ஒரு பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் மரித்தபொழுது, அவர் மேல் வைத்த மதிப்பால் சுதேசிகள் சுருட்டும் விஸ்கியும் கொண்டு போய் அவர் கல்லறைமேல் படைத்து பூஜை செய்தார்களென்றார்.

Coonoor Temperance Association:—மூன்று வருஷங்களுக்கு முன்னே குன்னூரில் ஒரு மதுவிலக்குச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் மெம்பர்கள் எல்லாரும் இந்துக்கள். அச்சங்கம் சிறந்த வேலை செய்து வருகிறது. ஒரு ரீடிங் ரூம் ஸ்தாபித்திருக்கிறது. ஒரு ஏழைப் பையனுக்குப் படிப்பு கொடுக்கிறது. இப்படி அங்கங்கும் சபைகள் ஏற்பட வேண்டும்.

General News and Notes:

பொதுவர்த்தமானக் குறிப்புகள்.

A Dacoity in Coimbatore:—கோயம்புத்தூர் அடிஷனல் செஷன்ஸ் நீதியதிபர் முன்னிலையில் விசாரணையிலிருந்த தீவட்டிக் கொள்ளைக் கேஸ் முடிவு பெற்று விட்டது. இதில் குற்றவாளிகளான ஒன்பது பேர் மேலும் குற்றம் ருஜுவானது. சேலத்தைச் சேர்ந்த குறவர்களான இக்கூட்டக் கள்ளர் வண்டியேறி 60 மைல் தூரம் பிரயாணம் செய்து கோயம்புத்தூரில் மூலனூர் சந்தையிலிருந்து திரும்பி வந்த வர்த்தகரைத் தாக்கி அநேகரைக் காதறுத்தும் கால்களை யொடித்தும் இம்சை செய்து கொள்ளையடித்தார்கள். துப்பாக்கிளும் உபயோகித்தார்கள். பிடிபட்ட ஒன்பது பேரில் மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். ஒன்பது பேரையும் ஜீவ கால பரியந்தம் தண்ணீர்மேலேற்றி விடத் தீர்ப்பாயிற்று.

The Edward VII Memorial Fund—சென்னை இராஜதானி ஏழாம் எட்வர்ட் ஞாபக நிதிக்கு இப்போது ரூ. 130000க்கு மேல் சேர்ந்திருக்கிறது. இது ஜனங்களுடைய உதாரத்வத்தையும், நிதியின் காரியதரிசிகளினது முயற்சியையும் காண்பிக்கிறது. இதே சமயத்தில் முழு இந்தியா ஏழாம் எட்வர்ட் ஞாபக நிதிக்கு ரூ. 2,69,054 சேர்ந்திருக்கிறது. இதற்கு இன்னும் ரூ, 2½ லக்ஷம் வேண்டியது. சென்னை மாகாணத்தாரின் உதவி கேட்கப்பட்டிருக்கிறது.

A Remarkable Sence ' in Court:—சென்ற வாரத்தில் கல்கத்தா போலீஸ் கோர்ட்டில் ஒரு அதிசயமான கேஸ் நடந்தது. லீடன் என்கிற ஐரோப்பிய வயோதிக னொருவன் 21 வருஷங்களுக்கு முன்னே அசன்சோலில் தான் இழந்து விட்ட தன்மகளைக் கோர்ட்டார் தன் வசப்படுத்த வேண்டு மென்று பிரியாது செய்தான். கோர்ட்டில் ஆஜரான அந்தப் பெண், தகப்பன் சொன்ன அடையாளங்களை யெல்லாம் நம்பாமல், தான் அவனுடைய மகள் அல்ல ளெனமறுதலித்தாள். அந்தப் பெண்ணைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிற மிஸிஸ் ஒக்கானல் என்பவள், அவளைக் குழந்தைப் பருவத்தில் 21 வருஷங்களுக்கு முன்னர் அவள் தகப்பன் தனக்குக் கொடுத்து விட்டா னென்றும் தன் சொந்தப் பிள்ளையைப் போல் தான் வளர்த்து வருவதாகவும் சொன்னாள். நியாயாதிபதி அவள் வயதுள்ளவளாயிருக்கிற படியால் தன்னிஷ்டம்போல் யாரிடத்திலாவது போயிருக்கலாமென்று தீர்ப்பு சொல்ல, அவள் சந்தோஷத்தோடே வளர்த்த கிழவியோடே போனாள்.

The Largest Liner in the World:—உலகிலுள்ள கப்பல்களெல்லாவற்றிலும் பெரிதாகக் கட்டப்பட்ட உவொயிட் ஸ்டார் லைனர்கப்பல் "ஒலிம்பிக்" என்பது பெல்வாஸ்ட்நகரத்தில் அக்டோபர்௴ 20௳ சமுத்திரத்தில் விடப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதைப் பார்க்கக் கூடிவந்து ஆரவாரஞ் செய்தார்கள். அக்கப்பல் 45,000 டன் பாரமேற்றக்கூடியது.

A Cold-blooded Murder of a Child:—சில தினங்களுக்கு முன்னர் திருநெல்வேலிக்கடுத்த சிந்து பூந்துறையில் 5 பிராயமுடைய வேளாளப் பெண் குழந்தை ஒன்று, அதே ஜாதி ஸ்திரீகளிருவரால் கொலையுண்டதா யறிவிக்கப்படுகிறது. பிள்ளை ரூ. 150 பெறுமான நகை யணிந்திருந்தது. அக்டோபர்௴ 15௳ காலை காணாமற் போகப் பல இடங்களிற் தேடியும் அகப்படவில்லை. மறுநாள் காலை குழந்தை பயங்கரமான விதமாய்க் கழுத்தறுபட்டு, நகைகளொன்று மின்றி வைக்கோல் போருக்கருகில் கிடந்தது. போலீஸார் இரண்டு ஸ்திரீகளையும் ஒரு புருஷனையும் பிடித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி வீட்டில் இரத்தந்தோய்ந்த கோணிப்பையும், குழந்தை யணிந்திருந்த நகையிற் சிலதும் அகப்பட்டிருக்கிறது.

Forgery by a Pleader:—அலஹபாத்தில் நூருடின் ஆமத் என்கிற இரண்டாவது கிரேட் பிளீடர் ரூ.1500க்கு ஒரு ஆசாமிக்குப் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தான். இது கோர்ட்டுக்குவர வேண்டியதாயிருந்தது. பிறகு சில காலம் பொறுத்துச் சொந்தக்காரனுக்குப் போய்ச் சேர்ந்த காலத்தில் அதில் தொகை விஷயமாய்த் தப்புச் சிருஷ்டனை யேற்பட்டிருக்க, அது ஷை பிளீடர் செய்ததென ருஜுவாயிற்று. ஆகையால் பிளீடர் சிருஷ்டனை கேஸில் விசாரிக்கப் பெற்று 3 வருஷ கடின காவல் சிக்ஷை அடைந்தான்.

South African Deportees:—தென்னாபிரிக்காவினின்று தேசப் பிரஷ்டஞ் செய்யப்பட்டவர்கள், இந்தியாவிலிருந்து "சுல்தான்" என்கிற கப்பலில் கேப்டவுண் சேர்ந்த போது அந்த கவர்ன்மெண்டார் அவர்களில் ஒருவன் நீங்கலாக மற்றவர்களைக் கரையிறங்கக் கூடாதென்று தடுத்து விட்டார்கள். 10 பேர் விசாரணை மட்டும் பட்டணத்திலிருக்கலாமென விடப்பட்டார்கள். இந்தியாவிலும் மோரிசிலும் பிறந்த 21 பேர்நீக்கிவிடப்பட டர்பான்போய்ச் சேர்ந்தார்கள். இவர்களில் கந்தியின் குமாரன் சேர 38 இந்தியர் வால்க்ட்ரஸ்டில் கைது செய்யப்பட்டு 28 பேர் நபருக்கு 25 பவுண் அபராதம் விதிக்கப் பட்டார்கள். ரிஜிஸ்டரேஷன் பத்திர மில்லாததால் 9 பேர் 50 பவுண் அபராதம் விதிக்கப் பட்டார்கள்.

Forest Fire in America:—மின்னிசோட்டா என்கிற விடத்தில் காடு தீப்பற்றி சில ஊர்களை யழித்து விட்டது. மானிடோபா எல்லை வரையில் 2500 சதுர மைல் விஸ்தீரணத்துக்கு எல்லாம் எரிந்து கரிந்த சாம்பல் மயமாயிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. கனடியன் ரெயில்வே அதிகாரிகள் அநேக ஆயிரக்கணக்கான ஸ்திரி புருஷபிள்ளைகளைச் காப்பாற்றினார்கள். பலர் மிதியுண்டு செத்ததாகத் தெரிகிறது. ரெயில்வேகாரர் காட்டின தீரம் அதிசயப் பட்டத்தக்கது. எரிந்து கொண்டிருக்கிற பாலத்தின் மேல் நாலா பக்கமும் புகை சூழ்ந்து கொண்டிருக்க வண்டிகளைத் தீரமாய் விட்டு ஜனங்களைக்

காப்பாற்றினார்கள். 300 பேர் மடிந்து போனார்கள். திரண்ட சொத்து சேதம். அநேகம்பேர் போன வழி தெரியவில்லை.

Aviation:—அக்டோபர் மீ 1உ மிலான் பட்டணத்திலிருந்து வந்த சேதிப்படி காப்டன் டிக்ஸனும் பிரஞ்சுக்காரன் தாமஸும் ஆகாயத்தில் மோதிக் கொண்டார்கள். காப்டன் டிக்ஸன் விழுந்து பட்ட காயம் பலமானது. தாமஸ் சுகப்பட்டு வருகிறார். தாமஸ் கப்பல் டிக்ஸனுக்கு மேல் 150 அடி உயரத்திலிருந்தது. ஆயினும் அவரைப் பார்க்க முடியாமற் போயிற்று. திடீரென மேலிருந்த கப்பல் இறங்கி வந்து கீழிருந்த கப்பலை மோத இரண்டும் உடைந்தது. இருவரும் விழுந்தார்கள். தவிர மீஸ் என்கிற இடத்தில் ஹொர் ஹாஸ் என்பவன் பறந்து போகையில் அவன் கப்பல் நொறுங்கி விழுந்து செத்தான். இத்தாலியன் இராணுவ ஆகாயக் கப்பல் பிராக்கியானாவிலிருந்து வெனீஸுக்குப் பிரயாணஞ் செய்தது. சார்ட்ராவில் ஆகாயத்திலிருந்து விழுந்து செத்த பாய்லாட் என்பவன் காமக்கிழத்தி அவன் கல்லறைமேல் கைத்துப்பாக்கியால் உயிரை மாய்த்துக் கொண்டாள். இங்கிலாந்து யுத்த ஆபீஸ் ஆகாயகமன பள்ளிக்கூடங்களை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. வெல்மான் என்கிற அமெரிக்கன் "அமெரிக்கா" என்கிற பெரிய ஆகாயக் கப்பலைச் செய்து அத்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து ஐரோப்புக்குப் போகத் துணிந்து சிலரோடு புறப்பட்டார். 800 மைல் தூரம் க்ஷேமமாய்ப் போனார். பிறகு புசலிலகப்பட்டு கப்பலோடு சமுத்திரத்தில் விழுந்து, அவ்வழிவந்த ஒரு கப்பலால் தூக்கியெடுக்கப் பட்டார். கூட இருந்தவர்களும் உயிர் பிழைத்தார்கள். கப்பல் சேதப்பட்டுப் போனது.

Saving a Passing Train:—கீழ் வங்காளம் ஸ்டேட் ரெயில்வேயில் ஒருபுகைவண்டி ஆபத்தினின்று தப்புவிக்கப்பட்ட சங்கதிவந்திருக்கிறது. செப்டம்பர் மீ 1உ காலையில் கோபால் சந்திரதாஸ் என்பவன், ரெயில் பாதையிலுள்ள ஒருசிறு ஆற்றில் ஸ்நானம் செய்யப்போனான். அந்த ஆற்றில் கட்டப்பட்டிருந்த ரெயில்வேபாலம் வேகமாய்ப் போகிறதண்ணீரால் உடைபட்டுவிழுந்துபோகிற தருணத்திலிருந்ததைக் கண்டான். அந்தசமயத்தில் சிராம்பூரைவிட்டுப் புறப்பட்ட ஜனவண்டி பரீத்பூருக்கு வந்துகொண்டிருந்தது. இந்தவண்டி சிறிதுநேரத்தில் உடைப்பட்ட பாலத்தின் மேல் வருமென்றும்; அதனால் பேராபத்து நேருமென்றும் அவனுக்கு தெரிந்தது. உடனே அந்த நல்லமனுஷன் கொஞ்சந்தூரத்திலிருந்ததன் வீட்டிற்கோடிப்போய் ஒரு சிவப்புகம்பளியை எடுத்துக்கொண்டு வந்து பாதையின்மேல் அரைமைல் தூரம் முன்னுக்கோடிபோய் இரண்டு கையாலும் கம்பளியை விரித்து வருகிறவண்டிக்கெதிரில் ஆட்டினான். வண்டி வேகமாய்வந்தது இவன் அசையாமல் கம்பளியை தூக்கிப் பிடித்திருந்தான். வண்டி நிறுத்தப்பட்டது. கார்ட் பாலத்தின்ஸ்திதியை அறிந்து அங்கே வந்து பார்க்கிறதற்குள் அது இடிந்து விழுந்தது. அந்த உத்தமனால் அநேக உயிர் காப்பாற்றப் பட்டன.

Seizure of Bombs, Swords, etc. in East Bengal:—கீழ் வங்காளம் முன்ஷிகஞ் என்னுமிடத்தில் லலித் சௌத்ரி என்பனுடைய தலைமையின்கீழ் சில வங்காளி வாலிபர் கொள்ளையடிக்கப் புறப்படப்போகிற சங்கதியைப்போலீஸார் அறிந்து திடும்பிரவேசமாய் சௌத்ரி வீட்டைப் போய் சோதனை போட்டார்கள். இச்சோதனை இரவு 10-மணிக்குமேல் 2-மணிவரையில் நடந்தது. 11 வெடிகுண்டுகளும், 4 கத்திகளும், 4 தீவட்டிகளும், வேறு கடிதங்கள் புஸ்தகங்கள் பலவற்றும் அகப்பட்டன. இரகசியக்கூட்டத்தார் பெயர்களடங்கிய ஒரு ஜாபிதாவுமகப்பட்டன. இதன்மூலமாய் 9 பேர் பிடிபட்டிருக்கிறார்கள்.

A Bogus Company:— திருவள்ளூர் தாலுக்காவைச் சேர்ந்த செங்கி என்னுமிடத்திலிருந்த சுதர்சனம் ஐயங்கார் என்கிற பிராமண வாலிபன் திருச்சினாப்பள்ளிக்குப்போய் ஒரு வீட்டை வாடகைக்கமர்த்தி, அரிசிகம்பெனி என்று ஒருபோர்டு போட்டு 30 சப்மானேஜர்கள் 15-முதல் 30 ரூபா சம்பளத்தில் வேண்டியதென்றும், 200 ரூபா டிபாஸிட் கட்டவேண்டுமென்றும் அப்ளிகேஷனோடு ஒருரூபா அனுப்பவேண்டுமென்றும்பத்திரிகையில் வெளிப்படுத்திப் பலபேரிடம் பணம்பறித்து மோசம்செய்து டிப்டி மாஜிஸ்ட்ரேட்கோர்ட்டில் விசாரணைக்குக்கொண்டுவரப்பட்டான். அவன் இளந்தையா யிருந்ததைக்கண்டு நியாயாதிபதி 6 மாத கடினகாவல் சிக்ஷை விதித்தார்.

Death of the Queen's Brother:—நமது மகாராணியின் சகோதரர் டெக்காட்டு பிரான்ஸிஸ் பிரபு அக்டோபர்மீ 22உ காலஞ் சென்றுபோனார் என்கிற துக்க செய்தி வந்திருக்கிறது. பிரான்ஸிஸ் பிரபு ஈரலில் நோய்கொண்டு இரண்டுமுறை சத்திர சிகிச்சை செய்யப்பட்டது காரணமாய் மரணஞ் சம்பவித்ததாகச் சொல்லப்படுகிறது. கடைசி நேரத்தில் நமது மகாராஜாவும் மகாராணியும் நான்கு மணி நேரம் அவர் படுக்கை யண்டையிலிருந்தார்கள். மார்ல்பரோ மாளிகை ஆலயத்தில் பிரேதம் வைக்கப்பட்டு ஆராதனை நடந்தேறிய பின்னர், 26உ-வின்சரில் பரி. ஜார்ஜ் ஆலயத்தில் இராஜ மரியாதையோடு நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இராஜ குடும்பத்தாரும் அயல் நாட்டுப் பிரதிகாவலர்களும், இன்னும் பலரும் தங்கள் அந்திய கடமையைச் செலுத்தினார்கள். நமது இராஜ குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் கலக்கின்றோம்.

Portugal:—போர்துகாலில் குடியரசு ஏற்பட்டது முதல் இதுகாறும் நிலைத்திருந்த கடின சட்டங்கள் நீக்கப்பட்டுப் போயின. இராஜ விரோதிகளைச் சம்பந்தித்த கடின பிரமாணங்களும், பத்திரிகைகளின் சுதந்தரத்தைக் குறைத்த விதிகளும் எடுபட்டுவிட்டன. முதலில் குடியரசை விரும்பாதிருந்த மார்க்கத் தலைவரான பிஷப்புக்கள் இப்போது குடியரசு சட்டங்களுக்குக் கீழமைந்து விட்டார்கள். கலகத்தில் குடியரசுக்கு அநுகூலமாயிருந்த போர் வீரருக்கு முழுசம்பளத்தில் நான்கு மாத ரஜா கொடுக்கப்பட்டது. இவர்களுக்குப் பதிலாய் மாகாண போர் வீரர்கள் வருவார்கள். பாப்பு பிரதிநிதி உரோமாபுரிக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். இது பாப்புவின் விரோதத்தைக் காண்பிக்கிறது. புரோடெஸ்டாண்டு பிரதிநிதிகள் பிரதம மந்திரியைக்கண்டு தங்களுக்குரிய சுயாதீனத்தைக் கேட்டபோது, எல்லா மார்க்கத்துக்கும் சமசுயாதீனம் இருக்குமென்று மந்திரி சொன்னார். பள்ளிக்கூடங்களெல்லாம் பிரத்தியேகப் படுத்தப்பட்டன. முரணுகிற உரோமை குருக்களைக் கைதுசெய்ய உத்தரவாகியிருக்கிறது. இராஜாங்க கடன் 4 கோடியே $12\frac{1}{2}$ லக்ஷம் பவுனை உடனே கொடுத்துத் தீர்த்துவிட முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

American Balloon Race:—அக்டோபர்மீ 17உ கார்டன் பென்னட் பந்தயத்தைக் கெலிக்க, அமெரிக்க, பிரஞ்சு, ஜெர்மன், சுவிஸ் ஆகாய வாகனங்கள் பத்து செண்ட்லூயியை விட்டுப் புறப்பட்டன. ஏழு வாகனங்கள் விஸ்கான்சின், மிச்சிகன், அண்டாரியா இவ்விடங்களில் வந்திறங்கின. ஜெர்மன் ஆகாயரதம் "ஆர்பர்க்" என்பது 18 ஆயிரம் அடியுயரத்திலிருந்து மிப்பிஸிங் ஏரிக்குள் விழுந்தது. சுவிஸ்ரதம் "எல்விற்றியா" என்பது 1100 மைல் தூரம் பிரயாணம் பண்ணி கியூபெக்கில் சேர்ந்தது. "ஆசூரியர்" என்கிற ஆகாயரதம் பிஸ்கேடாசிங் என்கிற இடத்தில் சேர்ந்தது. இதிலிருந்தவர்கள் காடுகளில் மூன்று நாள் வழி தெரியாதலைந்து ஒரு ஏரியை நீந்தி வந்தார்கள். "ஜெர்மேனியா" என்பது 1200 மைல் தூரம் போனது. அதிலிருந்தவர்களைத் தேட ஆட்கள் அனுப்பப் பட்டிருக்கிறார்கள். "டியூஸ்ல்டார்ப்" என்னும் ஜெர்மன்ரதம் 1240 மைல் தூரம் சென்று ஒரு காட்டிலிறங்கினது. 3 நாள் அதிலிருந்தோர் புதரில் பதுங்கியிருந்தனர். ஒரு அமெரிக்க வேட்டைக் காரன் அவர்களைக் காப்பாற்றினான். "அமெரிக்கா" என்னும் ரதம் 19உ ஒரு காட்டிலிறங்கினது. அதிலிருந்தவர் க்ஷேமமாயிருந்தார்கள். இந்த ரதம் 3 நாள் திரிந்து பல கஷ்டங்களை யனுபவித்தது. இதுவே பந்தயத்தைக் கெலித்தது. இதனால் ஆகாயகமன பைத்தியம் மேல்நாடுகளில் எவ்வளவு உச்சநிலை யடைந்திருக்கிற தென்பது தெரியவரும்.

The First Aeroplane Flight in India:—இன்னும் மூன்று நான்குவாரக் காலத்தில் பம்பாயில் முதலாவது ஆகாய ரதம் பறக்கப் போவதாக அறிவிக்கப்படுகிறது. கின்ஷாப்ட் என்கிற கம்பெனியார் இதற்குரிய எத்தனங்களைச் செய்கிறார்கள். இந்தக் கம்பெனி காரியதரிசி பேய்ன் காலவே என்பவர் முன்னாயத்தங்களைச் செய்ய லண்டனிலிருந்து பம்பாய்க்கு வந்திருக்கிறார். இங்கு உபயோகிக்கப் போகும் யந்திரம் நூதன வகையாய்ச் செய்யப்பட்ட பிளாரியட் மானோபிளேன் என்பதாம். ஆர்த்தர் பர் என்பவர் இந்தக் கப்பலில் மேலே பறக்கப் போகிறார். அலஹாபாத் பொருட் காக்ஷியில் இச்சம்பவம் நடக்கப் போகிறது.